செ.கு.எண்: 355

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.10.2012

26.9.2012 அன்று சென்னையில் இடி, மின்னல் மற்றும் சூறாவளிக் காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக, சென்னை மெரினா கடற்கரையில் சேப்பாக்கம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம் எதிரே நடந்து சென்று கொண்டிருந்த திரு.ரமேஷ்குமார் என்பவரின் மகன் செல்வன் விக்னேஷ் மின்னல் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை வியாசர்பாடி ரயில்வே பிரிட்ஜ் அருகே 26.9.2012 அன்று கழிவு நீர் குழாய்களை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. பாபு என்பவர் மீது பக்கவாட்டு மண் சரிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்த விபத்துகளில் அகால மரணமடைந்த இரண்டு நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட விபத்துகளில் உயிரிழந்த விக்னேஷ் மற்றும் பாபு ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்